RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22426

OPEN ACCESS

# இலையுதிர் காலம் நாவல் உணர்த்தும் முதியோர் பிரச்சனைகள்

**இரா.ச. சுகிர்தா பஸ்மத் [அ], தா. அகிலாரூபி [ஆ, *], க. ஜெயஷீலா [ஆ]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), நாகர்கோவில்-629004. தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), நாகர்கோவில்–629004, தமிழ்நாடு, இந்தியா

# The Problems of the Elderly that the Novel "Ilaiyuthikaalam (Autumn)" conveys

**R.S. Sugirtha Basmath [a], D. Ahila Rubi [b, *], K. Jaya Sheela [b]**

[a] Department of Tamil, Government Art and Science Collage, (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagarcovil-629004, Tamil Nadu, India

[b] Department of Tamil, Scott Christian College, (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagercoil-629004, Tamil Nadu, India

* Corresponding Author: jeromecherubim@gmail.com

Received: 29-06-2022
Revised: 21-09-2022
Accepted: 30-09-2022
Published: 15-10-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil language is full of sweetness and brilliance. The Tamil language has innumerable literary avenues. Novels transcribe and display biographical cues. 'Ilaiyuthirkaalam' is written with the problems of the elderly as the plot. Author Neela Padmanabhan has written the novel 'Ilaiyuthirkaalam' with an understanding and absorption of the problems of the elderly. The Ilaiyuthikaalam novel depicts the burden of the elderly who have dedicated themselves to the cause of the relationship. The novel Ilaiyuthikaalam highlights that old age, which is described as "Second Childhood", is not a state of happiness but a state of misery. The problems faced by the elderly in old age homes and the environment in which they live explain the problems of the elderly. Ilaiyuthikaalam novel addresses the problems of the elderly in the century when old age homes are overflowing. Ilaiyuthikaalam novel brings out the problems faced by the body and mind as one gets older. From this novel, it can be seen that elderly people who need to be cared for like children are suffering from a lack of care.

**Keywords:** Ilaiyuthirkaalam, Relationship, Old Age, Elderly Problems

## முன்னுரை

காலத்தைக் காட்டும் கண்ணாடியாகத் திகழும் இலக்கியங்கள் சமூக பிரச்சினைகளைக் காலந்தோறும் எடுத்துக் கூறுவதாக அமைகின்றன. இலக்கிய படைப்புகள் படைக்கப்படும் காலத்தில் காணப்படும் சமூக பிரச்சனைகள் படைப்பிற்குப் படைப்புக் கரு ஆகின்றது. முதியோர் இல்லங்கள் மிகுந்து வரும் இந்நூற்றாண்டில் முதியோர்களின் பிரச்சினைகளை இலையுதிர்காலம் நாவல் காட்டுகிறது. குழந்தையைப் போன்று கவனிக்கபட வேண்டிய வயோதிபர்கள் பராமரிப்பு இன்றி தவிக்கும் நிலையை இந்நாவலின் மூலம் அறியலாம்.

## இலையுதிர் காலம்

இலையுதிர்காலம் நாவல் முதியோர்களின் பிரச்சனையை விளக்குவதாக அமைகிறது. மனித வாழ்வின் இறுதி கட்டம் முதுமை இலையுதிர்காலம் தாவரங்களின் இறுதிக்காலத்தைக் குறிக்கிறது. இலையுதிர்கால நாவல் முதியோர்களின் பிரச்சனையைக் கூறுவதால் நாவலுக்கு இலையுதிர் காலம் என்னும் குறியீட்டுத் தலைப்பை வைத்திருப்பது சிறப்பிற்குரியது. முதுமை வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும், மன பாதிப்புகளும், புறக்கணிப்புகளும் இலையுதிர்கால நாவலில் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் நீல. பத்மநாபனின் படைப்புகள் நுட்பமான கதாபாத்திரங்களை நகர்த்தி செல்லக்கூடியவை. பிற எழுத்தாளர்களின் படைப்புபாங்கிலிருந்து முற்றிலும் மாறுபட்ட படைப்பு திறன் கொண்டவர் நீல. பத்மநாபன். கதாப்பாத்திரங்கள், மொழி நடை, கதைக்கரு என எல்லாவற்றிலும் தம் படைப்பில் தனித்துவம் காணப்படும்.

குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஆசிரியர் நீலபத்மநாபன். தன் குடும்ப உறவுகளின் முதுமைக் காலத்தை நன்கு உட்கொண்டவர். தனது மூதாதையர்களின் முதுமைக் காலத்தைக் கண்டுணர்ந்தமை இலையுதிர்காலம் நாவலுக்கு வித்தானது.

“இளமை நாட்களிலிருந்தே முதியோர்களிடம் ஏனோ ஒரு நெருக்கம், பாட்டி, தாத்தா முதலியவர்கள் மட்டுமல்ல, உறவில், நட்பில் பழக்கத்தில் எல்லாம் வீட்டில் வருகிறவர்கள், அவர்கள் முதிர்ச்சியான பேச்சு வழக்குகள், பிரச்சனைகளைக் கவனிப்பதில் ஒரு ஆர்வம்” என்று முதியோர் பிரச்சினைகளை உற்றுநோக்கி இலையுதிர் காலம் நாவல் படைத்தமையைப் பதிவு செய்துள்ளார் (Neela Padmanabhan, 2010).

மேலும் இலையுதிர் காலம் நாவல் எழுதப்பட்ட காலக்கட்டம் ஆசிரியர் நீல பத்மநாபனின் முதுமைப்பருவம். ஆதலால் ஆசிரியர் தன் அனுபவத்தையும் சேர்த்து படைத்திருப்பது இந்நாவலுக்குப் பலம் சேர்க்கின்றது.

“மெல்ல மெல்ல இளமையிலிருந்து முதுமையை அடைந்து கொண்டிருந்த போது, மேலும் தீவிரமாய், நேருக்கு நேர் காண நேர்ந்தவை- அனுபவித்தை” என்று தனது வாழ்வு அனுபவத்தையும் இலையுதிர்காலம் நாவலில் இணைத்துள்ளார் ஆசிரியர் (Neela Padmanabhan, 2010).

## முதியோர்

முதியோர் என்பதற்கு வயது முதிர்ந்தவர், அறிஞர் என்று லியோ அகராதி பொருள் கூறுகிறது. "முதியோர்களின் நரை மயிர் மகிமையான கிரீடம்" என திருவிவிலியமும் முதியோர்களின் மேன்மையை எடுத்துரைக்கிறது.

“முதுமை என்பது இறைவன் தந்த ஒரு வரப்பிரசாதமான காலமாகும். ஆனால் அதைச் சரியாகப் பயன்படுத்த இயலாமல் முதியவர்கள் துன்பப்படுகின்றனர். இளமையாக இருப்பவர்களுக்கும் ஒருநாள் முதுமை அடைய வேண்டிய நிலை ஏற்படும். எனவே முதுமை நிலை அடைந்தவர்களைத் தேவையற்றவர்களாகவும் பயன்படாதவர்களாகவும் கருதி புறக்கணிக்கக் கூடாது. ஆனால் நடைமுறை என்பது முதுமைக்குச் சாதகமாற்றதாகவும் பிள்ளைகளே முதிய பெற்றோர்களைப் புறக்கணிப்பதாகவும் உள்ளது". தனக்கென வாழாது தம் உறவுகளுக்காக வாழ்வைத் தொலைத்த முதியோர்கள் பாரமாக மாறும் மனப்போக்கினைக் கொண்ட இன்றைய சமூக வாழ்வில் முதியவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை இம் மனப்போக்கினை உறுதிப்படுத்துகிறது. முதியோர்கள் தங்கள் முதுமை வாழ்வில் பல இன்னல்களை அடைகின்றனர். மனநிலையிலும், உடல்நிலையிலும் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் வயோதிகர் நிலையை இலையுதிர் காலம் நாவல் எடுத்துக்காட்டுகிறது. முற்காலத்தில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர் உணவுத் தேவைக்காகவும், தங்குவதற்காகவும் கோயில் நிர்வாகத்தைச் சார்ந்திருந்த முறைமைக் கூறப்பட்டுள்ளது (Devadasu, 2021).

"முதியோர் இல்லங்கள் வராத நிலையில் முற்காலத்தில் கோயில்களில் உள்ள மடங்களிலே முதியோர்கள் சென்று தங்கி, அங்கு நடைபெறும் அன்னதானச் சோற்றை உண்டு வருதல் உண்டு" என்று முற்கால நிலையை விளக்கியுள்ளார். தற்காலத்தில் சத்திரங்கள் மாறி முதியோர் இல்லங்கள் பெருகிவிட்ட நிலைமையைக் காணமுடிகிறது (Sivathamby, 2015).

முதுமைப் பருவத்தில் உடல் ஆரோக்கியத்தை இழந்து நோய்க்கு ஆளாகின்றனர். தங்கள் கடமைகளைச் செய்ய இயலாதவாறு ஆரோக்கியமற்ற வாழ்வியலைக் கொண்டுள்ளனர். உறவுகளால் ஒதுக்கப்படும் முதுமை நிலையைச் சமூகத்தில் காணமுடிகிறது.

ஆசிரியர் நீலபத்மநாபன் இலையுதிர் காலம் நாவலில் மனைவியை இழந்த கணவன் படும் துயர நிலையை விளக்கியுள்ளார். பி. பி சாருக்குத் தன் நண்பன் தேவசகாயம்த் தனிமை துயரைக் கடிதத்தின் மூலம் தெரிவிப்பதாக அமைகிறது. வயதான காலத்தில் மனைவியையும், மகனையும் இழந்த தேவசகாயம் மனைவியை நினைத்து வருந்துவதை, "அவள் என் காரியங்களைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.... அன்று ராத்திரியும் எனக்கு உணவு பரிமாறிவிட்டுப் போய் படுத்தவள், பிறகு, எழுந்திருக்கவில்லை. சுகமான மரணம், தனிமை என்னை வாட்டி வருகிறது வயசான காலத்தில் ஏன் இப்படியெல்லாம், ஒன்றுக்குப் பின் ஒன்றாய் இழப்புக்கள்? (Neela Padmanabhan, 2015). என்று மனைவியை இழந்த தேவசகாயம், வயதான காலத்தில் தனிமைத் துயரை வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது. வயோதிபப்பருவம் ஓய்வெடுக்கும் காலகட்டமாகும். பணி நிறைவு செய்து ஓய்வெடுக்கும் நிலையில் உறவினர்களால் பணி செய்ய வற்புறுத்தப்படுகின்றனர். எனவே முதியோர்கள் முதியோர் இல்லங்களுக்குத் தாங்களாகவே சென்று சேரும் நிலை ஏற்படுகிறது. ஆசிரியர் நீலபத்மநாபன் இலையுதிர் காலம் நாவலில் முதியோர் இல்லங்களுக்குத் தாங்களாகவே செல்லும் முதியோரின் மனநிலையையும் பதிவுசெய்துள்ளார்.

மகனின் இல்லத்தில் வாழ்ந்தால் மகனின் பிள்ளைகளைக் கவனிக்கும் சூழல் ஏற்படும். தனியாகச் சென்று முதியோர் இல்லத்தில் வாழ்ந்தால் நிம்மதியாக வாழலாம் என்ற பி.பி. சாரின் மனநிலையைப் பின்வரும் கூற்றின் வாயிலாக விளக்குகிறார் ஆசிரியர் நீல பத்மநாபன்.

"வீட்டை எனக்குத் தந்துவிட்டு வாடகை வீட்டில் இருந்தார். பிறகு ஓல்ட் ஏஜ் ஹோமில் போயிருக்கிறார். வீட்டில் சும்மாதானே இருக்கீங்க. ஸ்கூலில் போய் உங்க பேரன கூட்டு வாங்க, இல்லாட்டி மார்க்கெட்டில் போய் கறிகாய் வாங்கி வாங்க இப்படி எல்லாம் எங்கிட்ட நீயும் உன் மனைவியும் சொல்லிக்கிட்இருந்தால் அதையெல்லாம் செஞ்சுட்டு இருக்க என்னால் முடியுமுன்னு தோணல்லே" என்று உறவுகளால் புறக்கணிக்கப்பட்டு மீண்டும் வேலை செய்யத் தூண்டுவதால் முதியோர் இல்லங்களைத் தாமாகவே நாடுகின்றனர் (Neela Padmanabhan, 2015). இந்திய குடும்பச் சூழலில் பெற்றோர்கள் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோர்களையும் கவனிப்பது குடும்பக் கட்டமைப்பாகும். பெற்றோரோடு வாழ விரும்பினாலும் வேலையின் காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயமான சூழல் சிலருக்கு ஏற்படுகிறது. எனவே பெற்றோரைக் கவனிப்பதற்காகத் தாதியர்களை ஏற்படுத்துகிறார்கள். பிள்ளைகள் பெற்றோரைக் கவனிக்கும் மனநிலையில் இருந்தாலும் சூழல் காரணமாக ஆள் வைத்து கவனிக்கும் நிலை உருவாகிறது. ஆசிரியர் நீலபத்மநாபன் தனிமையில் வாழும் தாயைக் கவனிக்க தாதியர் ஏற்பாடு செய்வதைப் பதிவு செய்துள்ளார்.

ராஜம் அம்மாளின் கணவர் இறந்து விடுகிறார். மகன் ராமு வேலைக்காக வெளிநாட்டிற்குச் செல்கின்றான். உடல்நிலை சரியில்லாதபோது தாயைக் கவனிக்க ராமு செவிலியரைப் பணிக்கு அமர்த்துகிறான்.

"ராகவன் சாரின் அறைக்கு வந்தபோது ஆஸ்பத்திரிக்குச் செல்லத் தயாராகக் கட்டிலில் உட்கார்ந்து இருக்கும் ராஜம் அம்மாள் ராகவன் சார் இறந்த பின் இவளை கவனிக்க நியமித்திருக்கும் ஹோம் நர்ஸ் - வீட்டு தாதி ரமணி என்று தாயைக் கவனிக்க செவிலியர் ஏற்படுத்தப்படுவதைக் காண இயலுகிறது (Neela Padmanabhan, 2015).

இளமையைக் கடந்து முதுமையை அடையும் போது முதியோர் உடல் அளவிலும், மனதளவிலும், பாதிக்கப்படுகின்றனர். கண் பார்வைக் குறைதல், கேட்கும் திறன் குறைதல், நினைவுத்

திறனை இழத்தல் போன்ற பல உடற் பிரச்னைகளுக்கு ஆளாகின்றனர். ஆசிரியர் நீலபத்மநாபன் முதியோர்கள் அனுபவிக்கும் நோய்களை விளக்கியுள்ளார். ஸ்ரீதரர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு செய்யும் செயல்களை ஸ்ரீதரின் மனைவி ஸ்ரீதரின் நண்பரிடத்தில் கூறுகையில்

"சும்மா, எல்லோரையும் போல தான் பேசிக் கிட்டிருப்பார், தெரியாதவங்களால் கண்டுக்க முடியாது திடீரென்று கேட்டை திறந்துகிட்டு வெளியே விறுவிறுன்று போய்விடுவார், ஒரு தடவை காரை ஸ்டார்ட் பண்ணி வெளியே எடுத்துட்டார் அதனால் தான் கேட்டை பூட்டி போட்டிருக்கோம்" என்று வயோதிக வயதில் ஏற்படும் பிரச்சனைகளை விளக்கியுள்ளார் (Neela Padmanabhan, 2015). மன அழுத்தத்தால் நினைவாற்றலை இழந்த முதியவரின் மனநிலையை எடுத்துக்காட்டுகிறது. முதியவர்கள் ஞாபக சக்தியை இழந்து விடுகின்றனர், ஞாபகமறதியால் அவதிப்படுகின்றனர். ஆசிரியர் நீலபத்மநாபன் மறதியினால் ஏற்படும் விளைவு பற்றி கூறியுள்ளார். சுமித்ராவின் அம்மா நினைவு திறனை இழந்து ஞாபகமறதியால் அவதிப்படுவதால் மருமக்கள் சுமித்ராவின் அம்மாவை அறைக்குள் பூட்டி போடும் நிலையைக் காண முடிகிறது. அம்மாவைப் பற்றி மகள் கூறுகையில்

"என்னைப் பார்த்தப்பக்கூட அவளால் புரிஞ்சுக்க முடியலே கண்ணும் காதும் இருந்தும், பார்ப்பது, கேட்பது ஒண்ணும் மூளைக்கு எட்டாத பரிதாபம் பாத்ரூம் இருந்த இடம் ஞாபகம் இல்லே அதனாலே வீட்டில் எந்த இடமுண்ணு இல்லே சின்ன குழந்தைகளைப் போல ஒண்ணுக்கும், ரெண்டுக்கும் எல்லாம் போய் விடுகிறா இதுக்கு பயந்து ஒரு அறைக்குள்ளே போட்டு பூட்டியிருக்காங்க அண்ணிமார்கள்." என்று மறதியினால் முதுமை அடைந்த நோயாளியும், நோயாளியைச் சார்ந்தவர்களும் துன்பப்படும் நிலையை விளக்கு கிறார் (Neela Padmanabhan, 2015).

## முதியோர் இல்லங்கள்

### உணவு

முதியோர்கள் தங்கள் முதுமை வயதில் உறவுகளால் ஒதுக்கப்பட்டும் போது முதியோர் இல்லங்களில் தங்குகின்றனர். இருவிதமான முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன. ஏழை மக்கள் இலவசமாகத் தங்கும் முதியோர் இல்லங்களும் பணம் கொடுத்துத் தங்கும் முதியோர் இல்லங்களும் இயங்கி வருகின்றன. முதியோர்கள் அனாதைகள் போல இயங்கும் நிலையையும் காண முடியும்.

குறைவான வசதிகளுடன் முதியேர்கள் முதியோர் இல்லங்களில் தங்குகின்றனர். முதியோர் இல்லங்களில் உணவு முதியோரின் உடல் நிலையைக் கவனத்தில் கொண்டு தயாரித்து பரிமாறப்படுகிறது.

மனிதன் உயிர் வாழ உணவு தேவை. நோய்வாய்க்குட்பட்டிருப்பதால் முதியோர் சரியான நேரத்தில் உணவு அருந்துகின்றனர். முதிர் வயதுள்ளவர்கள் பசித்ததும் உணவு உண்ணும் வகையில் முதியோர் இல்லங்களில் உணவு வழங்கப்படுகிறது.

"அறையியை சாத்திவிட்டு வரும்போது மெஸ்ஸுக்கு வரும் போது சினேகவயத்துக்கு புத்துயிர் அளிக்க, தான் எடுத்திருக்கும் முயற்சிகளைக் கேட்டு ராதாகிருஷ்ணன் முகத்தில் மலர்ச்சி அம்பி தோசை கொண்டு வந்து வைத்தான் காலை உணவுக்கு தோசை பரிமாறப்பட்டதை அறியமுடிகிறது (Neela Padmanabhan, 2015).

மனிதன் வாழ உறைவிடம் முக்கியமானது. பணம் கொடுத்து தங்கும் முதியோர் இல்லங்களில் முதியோர்கள் வாழ அறை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. படுப்பதற்காகப் படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

"அறையில் இரண்டு கட்டில்கள் அவர் வீட்டுக்காரி படுப்பதும், உட்கார்வதும் எல்லாம் அதில் ஒரு கட்டிலில் இன்னொரு கட்டில் அவருடையது ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள். மேஜை மீது சில புத்தகங்கள், குருவாயூரப்பன் படமும் இருந்தது" என்று முதியோர் இல்லங்களில் உள்ள அறையின்

அமைப்பை பதிவு செய்துள்ளார் (Neela Padmanabhan, 2015). முதியோர் இல்லங்களில் மருத்துவர்களின் ஆலோசனை, இறைவனை வழிபட வசதி, வாசிப்பதற்கு நூலகம் எனப் பல வசதிகள் அமைந்துள்ளன.

"எல்லோருக்கும் வேளாவேளைக்கு உணவு கிடைக்கிறது டாக்டர் சாமுவேல் தலைமையில் நல்ல மருத்துவ சேவை கிடைக்கிறது.

கடவுள் பக்தியுள்ளர்களுக்கு பிரார்த்தனை செய்ய, இறைவனை சேவிக்க வசதி இருக்கிறது வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு பத்திரிகைகள், நல்ல நூலகம் சற்று விசாலமான பூங்கா" வீடுகளில் உணவு கிடைக்காதவர்கள், படுக்கை இல்லாதவர்கள், மனம் விட்டு பேச இயலாதவர்கள் பயன்பெறும் விதமாக முதியோர் இல்லங்கள் சில செயல்படுவது நன்மை நிறைந்ததாக அமைகிறது (Neela Padmanabhan, 2015). இலவசமாக நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் இது போன்ற வசதிகள் உண்டு என்பது சந்தேகமே. பலரின் உதவியுடன் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் பல சிக்கல்களை உட்கொண்டது.

## தீமைகள்

வசதிகள் பல முதியோர்கள் இல்லங்களில் உள்ள போதும் உறவுகளால் துன்பபடுத்தபட்டு, ஒதுக்கப்பட்டு, விலக்கப்பட்ட வாழ்வு முதியோர்களுக்கு உறவினர்களோடும், பிள்ளைகளோடும் இணைந்து மன மகிழ்ச்சியாக வாழ வேண்டியவர்கள் அறைக்குள் தனித்திருப்பது வருத்தத்திற்குரியது. நன்மை, தீமைகளைப் பகிர்ந்து கொள்ள இயலாத சூழல் முதியோர்களுக்கு உருவாகிறது. ஆதலால் வெறுப்புணர்விற்குத் தள்ளப்படும் நிலை உருவாகிறது, மன அழுத்தம் அடைகின்றனர்.

## முடிவுரை

முதுமை என்பது வாழ்வின் இறுதி. உழைத்து பிறருக்காகத் தன் இளமை வாழ்வை அர்ப்பணித்த முதியோர்கள் பேணப்படுவது அவசியம். காலமாற்றமும் உறவுகளின் சிதைவும் முதியோரைக் கவனிக்கும் உறவை வலுவிழக்கச் செய்கின்றன. உறவுகள் உறவுகளின் முக்கியத்துவத்தை இழக்கும்போது முதியோர் இல்லங்கள் உருவாகின்றன. முதியோர்களை முதியோர் இல்லங்களில் மாற்றும் கலாச்சார மாற்றம் வேதனையளிப்பது. முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்கள் பல இன்னல்களை மனதளவிலும் உடலளவிலும் அடைவ இலையுதிர் காலம் நாவல் வாயிலாக அறிய இயலுகின்றது.

## References

Devadasu, T.A. (2021) Ulluvathellam Uyarvullal, New Century Book House, Chennai, India.

Neela Padmanabhan, (2010) Parvaikal Maruparvaikal, Thiruvarrasu Puthaga Nilaiyam, Chennai, India.

Neela Padmanabhan, (2015) Ilai Uthir Kaalam, Thiruvarrasu Puthaga Nilaiyam, Chennai, India.

Sivathamby, K. (2015) Muthumai, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License